இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 19-06-2023

# ஆளுநர் ஆட்டம் அடங்கட்டும்! - 1

நீயே அயிரை மீன், உனக்கு ஏன் விலாங்குச் சேட்டை?' என்று ஒரு பழமொழி உண்டு. நியமனப் பதவியில் இருக்கும் ஆளுநர், தன்னை ஏதோ அனைத்து அதிகாரங்களையும் கொண்ட மன்னரைப் போல நினைத்துக் கொள்கிறார்!

ஆளுநர் என்ன வேலையைப் பார்க்க வேண்டுமோ அதைப் பார்க்காமல், அடுத்தவர் வேலைகளில் மூக்கை நுழைத்துக் கொண்டு இருக்கிறார். பட்டமளிப்பு விழாக்களை முறையாக நடத்தாமல் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பட்டங்களைப் பெற முடியாமல் இருக்கிறார்கள். அதைப் பற்றிய எந்தக் கவலையும் ஆளுநருக்கு இல்லை.

**பட்டமளிப்பு விழாக்களை இவர் நடத்தாமல் இருப்பதன் மூலமாக வெளிநாடுகளுக்குச் சென்று உயர் கல்வி படிக்கவும் விண்ணப்பிக்கவும் தாமதம் ஆகிறது. வெளிநாடுகளில் தமிழ்நாட்டு மாணவ - மாணவியர் வேலை வாய்ப்பைப் பெற முடியவில்லை. பணிகளை நிரந்தரம் செய்வதில் சிக்கல் இருக்கிறது. ஆய்வுப்படிப்பு மற்றும் உயர்கல்வி படித்தவர்களுக்கான ஊதிய உயர்வு தள்ளிப் போகிறது.விசா கிடைப்பது தள்ளிப் போகிறது. 12 பல்கலைக் கழகங்களுக்கு முறையான பட்டமளிப்பு விழாக்களை நடத்தாமல் தினந்தோறும் யாரையோ கூட்டி வைத்துக்கொண்டு வியாக்கியானம் செய்து கொண்டு இருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.இரவி. இவரது செயல்படாத தன்மை காரணமாக 9.25 லட்சம் மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.**

'அரசுப் பல்கலைக் கழகங்களில் பட்டமளிப்பு விழா நடைபெறாமல் இருப்பதற்கு ஆளுநரே முழுப்பொறுப்பு' என்று உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி பகிரங்கரமாக குற்றம் சாட்டி இருந்தார். தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் துணைவேந்தர்கள், கல்வியாளர்களை வைத்துத்தான் பட்டமளிப்பு விழாக்கள் நடைபெறும், ஆனால் இப்போதைய ஆளுநர் வட மாநிலங்களைச் சேர்ந்தவர்களை அழைத்து வருகிறார், அவர்களிடம் தேதி வாங்க காத்திருப்பதால்தான் இந்த தாமதம் என்றும் அமைச்சர் பொன்முடி சொல்லி இருந்தார். ஆளுநரின் இந்தச் செயல்பாட்டை தி.மு.க. உள்ளிட்ட அரசியல் இயக்கங்களின் மாணவர் அமைப்புகளும் கடுமையாக கண்டித்துள்ளது. ஆளுநர் மாளிகைக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளன.

தமிழ்நாட்டு மாணவர்களின் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பைச் சீர்குலைக்கும் வகையில் பட்டமளிக்கும் கடமையைச் செய்யாமல் தவிர்த்தும் காலதாமதம் செய்தும் வருகிறார் ஆளுநர் என்று மாணவர் அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. தமிழ்நாடு அரசின் பல்கலைக் கழகங்களில் துணைவேந்தர்களை நியமிப்பதில் அரசியல் அமைப்புச் சட்டங்களின் விதிகளுக்குப் புறம்பாகவும் ஆளுநர் செயல்பட்டு வருகிறார் என்று இந்த அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. துணைவேந்தர்களை நியமிக்காமல் இழுத்தடித்து வருகிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி. இது பல்கலைக் கழகங்களின் செயல்பாட்டை முடக்குவது ஆகும். இதனால் தான் தமிழ்நாடு பல்கலைக் கழக வேந்தர்களை மாநில அரசே நியமிக்கும் வகையில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் சட்டமுன் வடிவுகள் கொண்டு வரப்பட்டன. அதற்கும் ஒப்புதல் தராமல் இழுத்தடித்துக் கொண்டு இருக்கிறார் ஆளுநர்.

இவை எல்லாம் அவர் பார்க்க வேண்டிய வேலைகள். அதைப் பார்க்கவில்லை. ஆனால் சனாதனத்துக்கு புதிய பொழிப்புரை சொல்லிக் காலம் கடத்திக் கொண்டு இருக்கிறார் ஆளுநர். அது அவரது கூட்டத்துக்கு முதுகு சொறியப் பயன்படலாம்.

**ஆனால் அதனால் எந்தப் பயனுமில்லை. காலாவதியானது சனாதனம். அது போல ஆளுநரின் உரையும் காலாவதி ஆகும். ஆனால் முதலமைச்சரின் அதிகாரத்தில் தலையிட்டு அடுத்த குழப்பத்தை ஏற்படுத்தப் பார்க்கிறார் ஆளுநர். அமைச்சர்களை நியமிப்பது நீக்குவது ஆகியவை முதலமைச்சரின் அதிகாரம் ஆகும். யாரையும் அவர் நியமிக்கலாம். நீக்கலாம். அதற்கான காரணம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அப்படி நியமிக்க நீக்க என்ன காரணம் என்பதை முதலமைச்சர் அவர்கள் சொல்லத் தேவையில்லை. அது அவரது விருப்பம் சார்ந்த தேர்வு ஆகும். விருப்பம் சார்ந்த நிராகரிப்பும் ஆகும். ஆனால் அமைச்சர் செந்தில்பாலாஜியை நீக்கியாக வேண்டும், அவர் மீது வழக்கு இருக்கிறது என்று கடிதம் அனுப்புகிறார் ஆளுநர். 'வழக்கு இருப்பதற்காக நீக்க வேண்டுமானால் ஒன்றிய அமைச்சர்கள் 33 பேர் மீது வழக்கு இருக்கிறது. அவர்கள் எப்படி தொடருகிறார்கள்?' என்பது முதலமைச்சர் எழுப்பும் கேள்வி ஆகும். அதற்கு எந்தப் பதிலும் இல்லை ஆளுநரிடம் இருந்து.**

**செந்தில்பாலாஜி வகித்த துறைகள் இரண்டு அமைச்சர்களுக்கு பிரித்து தரப்பட்டுள்ளது. இதனை நிராகரிக்கிறார் ஆளுநர். இந்த கோரிக்கையில் இருந்த வார்த்தையை வைத்து நிராகரிக்கிறார். இரண்டு அமைச்சர்களுக்கு துறையை பிரித்துத் தருவது முதலமைச்சரின் விருப்புரிமை ஆகும். இதில் தலையிட ஆளுநருக்கு என்ன அதிகாரம்? முதலமைச்சர் சொன்ன வார்த்தை சரியில்லை, முதலமைச்சர் அனுப்பிய லெட்டர் பேட் கலர் சரியில்லை என்பது மாதிரி சொல்வதெல்லாம் ஒரு காரணமா?**

**குஜராத் மாநில ஆளுநருக்கு எதிராக ஒரு காலத்தில் போர்க்கொடி தூக்கியவர்தான் இன்றைய பிரதமர் மோடி அவர்கள். அவர் அப்போது குஜராத் முதமைச்சராக இருந்தார். "உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் மசோதாவைக் குஜராத் மாநில பெண் ஆளுநர் கமலா பெனிவால் ஒப்புதல் அளிக்காமல் வைத்திருக்கிறார். பெண்களுக்கு எதிரியாகப் பெண் ஆளுநரே இருக்கிறார். ஒரு பெண்மணி குஜராத்தின் ஆளுநராக இருந்தும், பெண்களுக்கான இட ஒதுக்கீட்டு மசோதாவை நிறைவேற்ற முடியாமல் போனது நமது துரதிருஷ்டமே" என்று 2013 ஏப்ரல் 8ம் தேதி .டெல்லியில் நடந்த இந்தியத் தொழிலக சம்மேளனத்தின் (FICCI) கூட்டத்தில் பேசினார் அப்போதைய குஜராத் முதல்வர் மோடி.**

2009ம் ஆண்டு குஜராத் மாநில ஆளுநராகக் கமலா பெனிவால் நியமிக்கப்பட்டதில் இருந்து 2014 வரையில் அன்றைய குஜராத் முதல்வராக இருந்த மோடிக்கு பிரச்சினையும் மோதலும் இருந்து கொண்டே இருந்தது. இதேபோல் இன்னொரு பிரச்சினையிலும் மோதல் வெடித்தது...

**தொடரும்**



திருவாரூர் மாவட்டம் - காட்டூரில் ஜூன் 20-ல் கலைஞர் கோட்டம் திறப்பு விழாவில் கலந்து கொள்ள நேற்று (18.6.2023) மாலை விமானம் மூலம் திருச்சிக்கு வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை விமான நிலையத்தில் அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் கழகத்தினர் திரண்டு உற்சாக வரவேற்பளித்தனர்.

# வள்ளுவர் கோட்டமும்! கலைஞர் கோட்டமும்!

## உங்களில் ஒருவன்! ... முதல் பக்கத் தொடர்ச்சி!

சாதனையாக்கும் வலிமையை உடன்பிறப்புகளாகிய ஒவ்வொருவரும் பெற்றிருக்கிறோம். அதிகார மிரட்டல்களுக்கு ஒரு போதும் அஞ்சமாட்டோம். மக்கள் நலன் காக்கவும் - மாநில உரிமைகளை மீட்கவும் முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் துணிந்து நடைபோடுவோம் என்பதுதான் கோவையில் நடந்த கண்டனக் கூட்டம் விடுத்துள்ள செய்தி.

குறுக்கே வரும் தடைகளைத் தகர்த்து நம் பயணம் தொடர்கிறது. வெற்றிகரமாகத் தொடர்ந்து கொண்டே இருக்கும். தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, "சரித்திரத்தில் நமக்குக் கிடைக்கிற இடம், சலுகையால் பெறக் கூடியது அல்ல." உறுதிமிக்க போராட்டத்தால் எதையும் சாதிப்போம். அந்த உணர்வுடன் கொள்கை வீரர்களாம் கழக உடன்பிறப்புகளை, ஜூன் 20 அன்று திருவாரூரில் திறக்கப்படவுள்ள கலைஞர் கோட்டம் திறப்பு விழாவில் திரண்டிட அழைக்கிறேன்.

**மாண்புமிகு பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்கள் கலைஞர் கோட்டத்தைத் திறந்து வைக்கிறார். மாண்புமிகு பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ் அவர்கள் முத்துவேலர் நூலகத்தைத் திறந்து வைக்கிறார். நம் உயிர்நிகர் தலைவர் அவர்களின் திருவுருவச் சிலையை உங்களில் ஒருவனான நான் திறந்து வைக்கிறேன். தயாளு அம்மாள் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் டாக்டர் மோகன் காமேசுவரன் வரவேற்புரையாற்றுகிறார். கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் தலைமையில் கவியரங்கம், திரு.சாலமன் பாப்பையா அவர்கள் தலைமையில் பட்டிமன்றம், கலைமாமணி மாலதி லஷ்மண் குழுவினரின் பாட்டரங்கம் எனக் காலை முதல் மாலை வரை பல்வேறு நிகழ்வுகளால் முத்தமிழறிஞர் கலைஞருக்கு அவரது திருவாரூரில் புகழ்மாலை சூட்டுகிறோம்.**

ஒவ்வொரு உடன்பிறப்பின் உணர்வாகவும், உயிராகவும் உள்ள நம் தலைவர் கலைஞரின் பெயரில் உயர்ந்து நிற்கும் கோட்டத்தின் திறப்புவிழாவில் உங்கள் திருமுகம் காணக் காத்திருக்கிறேன். பகை வெல்லும் பட்டாளமாய் - அறம் காக்கும் அணிவகுப்பாய் உடன்பிறப்புகளே திரண்டிடுவீர்!

**அன்புடன்,**

**மு.க.ஸ்டாலின்,**

**திருவள்ளுவர் ஆண்டு 2054,**
**ஆனி 3,**
**18.06.2023.**

'கலைஞர் கோட்டம்' திறப்பு விழா:

# திருவாரூரில் திரளாகப் பங்கேற்பீர்!

## புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி வேண்டுகோள்!



புதுக்கோட்டை, ஜுன் 19-

திருவாரூரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் கலைஞர் கோட்டம் நாளை திறக்கப்பட இருக்கிறது. இந்த திறப்பு விழாவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து புதுக் கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நாளை (20.6.2023 செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணிக்கு உலகத் தமிழினத்தின் உன்னதத் தலைவராகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி திருவாரூர் மாவட்டம், காட்டூரில் திருமதி.தயாளு அம்மாள் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள கலைஞர் கோட்டம் மற்றும் கலைஞர் அவர்களின் சிலை திறப்பு விழா கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் மேற்கண்ட நிகழ்ச்சிகளில் புதுக் கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய பகுதி, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள். இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள். மாவட்ட ஒன்றியக் குழு உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப் பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், கழக முன்னோடிகள்,செயல் வீரர்கள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

திருவாரூர் மாவட்டம் காட்டூரில் 'கலைஞர் கோட்டம்' திறப்பு விழாவில்

# நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிக்கை!



நாமக்கல், ஜுன் 19-

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

நாளை (20.06.2023, செவ்வாய்) காலை 10 மணிக்கு உலக தமிழினத்தின் உன்னத தலைவராக திகழ்ந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஒட்டி திருவாரூர் மாவட்டம் காட்டூரில் திருமதி.தயாளு அம்மாள் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள கலைஞர் கோட்டம் மற்றும் கலைஞர் அவர்களின் சிலை திறப்பு விழா கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

அது சமயம் மேற்கண்ட நிகழ்ச்சிகளில் நாமக்கல் மேற்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், நகர மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கழகத் தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் மழை! மக்கள் மகிழ்ச்சி!

சென்னை, ஜுன் 19-

தெற்கு வங்கக்கடல் பகுதியில் நிலவி வரும் மேலடுக்கு சுழற்றி காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் சென்னையில் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் நேற்று தெரிவித்தது.

இந்நிலையில், சென்னையின் ஒரு சில பகுதிகளில் நேற்று காலை மழை பெய்தது. சென்னை சென்டிரல், எழும்பூர், புரசைவாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் காலை மிதமான மழை பெய்தது. இதன் காரணமாக வெப்பம் தணிந்து காற்றுடன் குளிர்ச்சியான சூழ்நிலை நிலவி வருகிறது. இதனால் மக்கள் சற்று மகிழ்ச்சியடைந்தனர்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர்நகர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதிச் செயலாளர் கே.கண்ணன் எம்.சி. தலைமையில் ஆன்மீகபெருமக்கள் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், மயிலம் சிவ ஞானபாலயசுவாமிகள், கோவை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம், சாந்தலிங்க மருதாசல அடிகளார், கோவை இராமானந்த குமரகுருபர அடிகளார் ஆகியோர் முத்தமிழறிஞர் கலைஞரை புகழுரைத்த அரங்க நிகழ்ச்சியை மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்ரமணியன் தொடங்கி வைத்தார். இதில் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ, க.தனசேகரன் எம்.சி, காசிமுத்துமாணிக்கம், மு.ராசா முன்னிலையில் உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன், எஸ்.டி.தங்கராஜ், வாசுகிபாண்டியன் வரவேற்க அஜந்தா ரவி நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில் ச.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ, காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ, பாலவாக்கம் சோமு, குணசேகரன், வேளச்சேரி பாஸ்கர், பாலவாக்கம் மனோகர், எம்.கிருஷ்ணமூர்த்தி, நோளம்பூர் ராஜன், எஸ்.வி.ரவிசந்திரன், வி.இ.மதியழகன், துரை கபிலன், கன்னிகை ஜி.ஸ்டாலின், கவுன்சிலர் சகோதரி ரத்னா லோகேஸ்வரன், சைதை அன்பரசன், பி.ஜெ.பாஸ்கர், ஹரிகிருஷ்ணன், கனிமொழி, வாட்டர் விஜி, ரஞ்சித் குமார், இரா. செழியன், பூக்கடை ஆர்.பழனிச்சாமி, மு.கோவிந்தராஜ், மு.அன்பழகன், பி.கே.குமார், சதீஷ்கண்ணன், சோ.செந்தில்குமார், மைக்கேல், வி.ஏ.ராஜா, பழக்கடைபாஸ்கர், தஞ்சை பாபு மற்றும் நிர்வாகிகள் பெருமளவில் கலந்து கொண்டனர்.